செய்திக் குறிப்பு dt: 3.3.18

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்ட காரைக்காலை சுத்தம் செய்யும் தொடர் வார நிகழ்ச்சி இன்று MMH-நகர், V.J.நகர். வாத்தில் நகர் உள்ளிட்ட இடங்களில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் தலைமையில் தெருக்கள் மற்றும் சாக்கடைகளில் அடைத்துள்ள பிளாஸ்டிக் கழிவுகளை சுத்தம் செய்தல் மற்றும் வீடு வீடாக சென்று மக்களிடம் தரம்பிரித்து தரவேண்டும், குப்பைகளை ரோட்டில் போடக்கூடாது என்ற விழிப்புணர்வு நோட்டீஸ் அளித்து வீடு வீடாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி காலை 9.00 மணி முதல் 12.00 வரை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பாரதியார் கல்லூரியைச் சார்ந்த NSS-மாணவர்கள் சுமார் 50-க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட ஆட்சியர் அவர்கள் – 50 சதவீத மக்கள் குப்பைகளை தரம்பிரித்து கொடுக்கிறார்கள் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். மீதி உள்ள 50% மக்களும் குப்பைகளை தரம்பிரித்து அளித்து காரைக்கால் தூய்மையான நகரமாக மாறுவதற்கு ஒத்துழைக்க வேண்டும். உடன் நகராட்சி ஆணையர் திரு. சுதாகர். N.S.S. திரு. வெற்றிபதி மற்றும் ஹேண்ட் இன் ஹேண்ட் உதவியாளர்கள் கலந்து கொண்டார்.

3/3/18